


# ஆசிரியர் குறிப்பு

சுனிதா ஜோதிலிங்கம்

இளவேனீர் காலத்தில் அரும்புகின்ற வண்ணமயமான மலர்களைப் போன்று இந்த இதழ், செந்தமிழை ஆவலோடு கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களாலும், தாம் பெற்ற கல்வியை கற்றுத் தருகின்ற ஆசிரியர்களாலும், மற்றும் பெற்றோர்களாலும் இனிதே மலர்ந்துள்ளது. நவீன உலகின் கவிதை, கட்டுரை, வார்த்தை விளையாட்டு மற்றும் தமிழ்ப்பள்ளியின் அங்கீகாரம் பெறுதலின் தற்போதைய நிலவரத்தையும் கொண்டு இந்த இதழ் அரும்பியுள்ளது.

‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்’ என்ற அவ்வையாரின் வரிகளுக்கேற்ப, மாணவர்கள் தங்களுடைய கைவண்ணத்தினையும், திறமையையும் இங்கே வெளிப்படுத்தியுள்ளனர்.

நாம், வெவ்வேறு ஊர்களிலிருந்து வந்து இங்கே கூடியுள்ளோம். நம்முடைய சொந்த ஊர் மற்றும் சென்ற ஊரின் பெருமைகளையும், விழாக்களையும், அறிந்த விபரங்களையும் இந்த அரும்பு வாயிலாக வெளிப்படுத்தி, எல்லோரும் பயன்பெறும் வகையில், வரும் இதழ்களை வாசனைமிகு மலர்களாக்கிட நாம் அனைவரும் இணைந்து செயல்படுவோம்.

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | 2 |
| பள்ளிச் செயல்பாடுகள் | 3 |
| தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுக்கு சமர்ப்பணம் | 5 |
| தமிழ் மாதங்களின் மகிமைகள் | 6 |
| ஓவியங்கள் | 7 |
| உயிர் எழுத்துக்களின் உன்னதம் | 7 |
| உலக தாய்மொழி நாள் | 8 |
| அச்சிடும் வரலாற்றில் தமிழ் | 9 |
| சர்வதேச மகளிர் தினம் | 10 |
| பெண் அவள் | 11 |
| தமிழ் சுடோகு | 11 |
| நீயே எனக்கு குருவானாய் | 12 |

# தமிழ்த்தாய் வாழ்த்து



*நீராரும் கடல் உடுத்த நில மடந்தைக் கெழிலொழுகும்*
*சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்*
*தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்*
*தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!*
*அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற,*
*எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே! தமிழணங்கே!*
*நின் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!*
*வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!*

***- மனோன்மணீயம் பெ. சுந்தரனார்***

## பொருள்

*அலை கடலே ஆடையான இந்த அழகான பூமிப் பெண்ணிற்கு பாரத நாடே முகமாம்*
*தென்திசை அதன் நெற்றியாம்*
*அதில் திலகமென திகழ்வது திராவிட திருநாடாம்*
*அந்தத் திலகத்தின் வாசனைப் போல் அனைத்து உலகமும் இன்பம் காண*
*எல்லா திசையிலும் புகழ் மணக்க இருக்கும் தெய்வமகள் ஆகிய தமிழே!*
*என்றென்றும் இளமையாக இருக்கிற உன்னுடைய இந்த அழகைக் கண்டு வியந்து,*
*செய்யும் செயலையும் மறந்து வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!*

*தமிழ்த்தாய் வாழ்த்து என்பது இந்திய மாநில அரசுகளுள், தமிழை ஆட்சி மொழியாய் கொண்டுள்ளவற்றில் பாடப்படும் கடவுள் வாழ்த்துப் பாடலாகும். இப்பாடல் அரசு விழாக்கள், பள்ளிகளின் காலை வணக்கக் கூட்டம் மற்றும் உலகம் முழுவதும் உள்ள அனைத்து தமிழ் சங்க விழாக்கள், தமிழ் பள்ளிகள் ஆகியவற்றின் துவக்கத்தில் பாடப்படுகிறது.*

*தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலை எழுதியவர் மனோன்மணீயம் பெ.சுந்தரனார் என்பவராவார். இவர் எழுதிய புகழ்பெற்ற நாடக நூலான மனோன்மணீயம் நூலில் உள்ள துதிப்பாடலின் ஒரு பகுதி இப்பாடலாகும். இப்பாடலை 1970ஆம் ஆண்டு, தமிழக அரசு தமிழ்த்தாய் வாழ்த்தாக அறிவித்தது.*

***- ரேவதி திருநா***


# பள்ளிச் செயல்பாடுகள்


**செந்தில் இராதாகிருஷ்ணன், பள்ளி இயக்குனர்**


**வணக்கம்,**


*மிசௌரி தமிழ்ப் பள்ளியின் வசந்த கால இதழை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி. அனைத்து மாணவர்களும் இரண்டாம் பருவத் தேர்வை நிறைவு செய்து, வரும் மே மாதம் நடைபெற உள்ள இந்த கல்வி ஆண்டின் கடைசி பருவத் தேர்வுக்கு மிகுந்த ஆர்வத்துடன் தயாராகிக் கொண்டிருக்கின்றனர். மூன்றாம் பருவத்தில் மாணவர்களிடம் தமிழ் மொழி கற்பதில் நல்ல ஆர்வமும், முன்னேற்றமும் காணப்படுகிறது.*


*கீழே உள்ள படங்களில் நம் பள்ளியின் இரண்டு கிளைகளையும் சேர்த்து மாணவர்களின் பருவத் தேர்வு, வீட்டுப் பாடம் மற்றும் வருகைப் பதிவு ஆகியவற்றின் சராசரி மதிப்பெண்களை பள்ளி அளவிலும், நிலை அளவிலும் முதலாம் பருவத்தையும், இரண்டாம் பருவத்தையும் ஒப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த புள்ளி விபரங்களை பயன்படுத்தி நிலை ஆசிரியர்களும், பள்ளி நிர்வாகக் குழுவும், ஆராய்ந்து மாணவர்களின் தமிழ்மொழிக் கல்வி வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தேவையான முறைகள் மற்றும் மாற்றங்களை அறிமுகம் செய்ய மிகப் பயனுள்ள தகவலாக இது உள்ளது.*







*மாணவர்களின் தமிழ்க் கல்வித் திறனை மதிப்பீடு செய்வதற்கு, பருவத் தேர்வுகளை தவிர, தமிழ் மொழி பேச்சுத் திறன், கேட்புத் திறன், படிப்புத் திறன், எழுத்துத் திறன் போன்ற நான்கு முக்கிய திறன்களை மதிப்பீடு செய்வதற்கான* "Speak-Understand - Read - Write Evaluation Process (SURWEP)" *என்னும் வழிமுறையை நமது பள்ளி ஆசிரியர்கள், அ.த.க-வின் உதவியுடன் தயாரித்துள்ளார்கள். இந்த முறையை பயன்படுத்தி மாணவர்களின் மொழித் திறன்களை பரிசோதனை செய்து, ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட வளர்ச்சிக்குத் தேவையான திறனை நன்கு பயிற்றுவித்து, இந்த நான்கு திறன்களையும் மாணவர்களுக்கு வலிமைப்படுத்துவதுதான் இதன் நோக்கம்.*

*முதல் கட்டமாக, வரும் வகுப்புகளில் இந்த முறையை அறிமுகப்படுத்த உள்ளோம். இதற்கு எந்த ஒரு சிறப்பு பயிற்சியும், முன்னறிவுப்பும் தேவை இல்லை. நிலை ஆசிரியர் பருவத் தேர்வு நடைபெறுவதற்கு முன்பு, இந்த முறையைப் பின்பற்றி மதிப்பீடு செய்து, மாணவர்களுக்கு நன்கு பயிற்சி அளிப்பார்கள் என்பதை தெரியப்படுத்திக் கொள்கிறோம்.*

*அனைத்து நிலைகளுக்கும், பாடப் புத்தகம் மற்றும் பயிற்சிப் புத்தகத்தில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து முன்னேற்றங்களை*



*ஏற்படுத்தும் நோக்கத்தில், தேவையான திருத்தங்கள் மற்றும் ஒரு சில மாற்றங்களை செய்வதற்காக, நமது பள்ளிச் சார்பில் அமெரிக்க தமிழ்க் கழகக் கூட்டத்தில் பங்கேற்று தெரியப் படுத்தி உள்ளோம். இந்த மாற்றங்களில் சிலவற்றை, அடுத்த கல்வி ஆண்டில் எதிர்பார்க்கலாம்.*

*இதைத் தவிர,* MOODLE *என்னும் மென்பொருள் வழியாக ஒவ்வொரு வகுப்பிற்கானப் பாடங்களை, மாணவர்கள் இணையத்தின் வாயிலாக மிக எளிமையாகப் பயில முடியும். அதற்கானப் பணியிலும் நமது பள்ளி தன்னார்வலர்கள், அ.த.க-வுடன் இணைந்து செயல்-பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.*

*மேலும், நமது பள்ளி மாணவர்கள் தமிழ் இணைய பல்கலைக்கழக மேல்நிலை சான்றிதழ் படிப்பை முடித்தவுடன், அவர்களது மேற்படிப்பை*

*பள்ளியின் செயல்பாடுகளுக்கு உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் மிசௌரி தமிழ்ப் பள்ளியின் நன்றிகள். நமது பள்ளியின் முன்னேற்றத்திற்கு உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களை பள்ளியின் மின்னஞ்சல்* **school@missouritamilsangam.org** *என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.*

தொடர்வதற்கு, பென்சில்வேனியா பல்கலைக்கழக தமிழ் பாடத் திட்டம், நமது பள்ளியில் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது. இது மாணவர்களுக்கு பொதுப் பள்ளியிலும் மற்றும் கல்லூரியிலும் இரண்டாவது மொழி மதிப்பீடு பெறுவதற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும்.

நமது பள்ளிக்கு அங்கீகாரம் (Accreditation) பெறும் முயற்சியில், முதல் நிலை மேற்பார்வை வெற்றிகரமாக முடிந்து, Candidate Status என்ற அடுத்த நிலை அடைந்து, ஓரளவிற்கு தர மதிப்பீட்டுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் AdvancEd என்ற தர மதிப்பீட்டு நிறுவனத்திற்கு சமர்ப்பித்துள்ளோம். கூடிய விரைவில், தர மதிப்பீடு நடைபெற உள்ளது. இந்த முயற்சிக்கு, அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் உதவி மற்றும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். நம்பிக்கையுடன் உழைப்போம், நாம் அனைவரும் சேர்ந்து இந்த முயற்சியில் வெற்றியடைய பாடுபடுவோம்.

செயின்ட் லூயிஸ் நகரில், வரும் சூலை மாதம் 4 மற்றும் 5-ம் தேதிகளில் மிகப் பெரிய தமிழ் விழா பெட்னா 2014 நடைபெற உள்ளது. இந்த விழாவின் மூலம் திரட்டப்படும் நிதி, நமது தமிழ்ப் பள்ளியின் வளர்ச்சிப் பணிக்கு வழங்கப்பட உள்ளது. பெட்னா விழா, செயின்ட் லூயிஸ் நகரில் நடைபெறுவதன் முக்கிய நோக்கம், தமிழ்ப் பள்ளி மற்றும் நமது தமிழ்ச் சமுதாயம் பயனடைய வேண்டும் என்பது தான். எனவே, இது நமது விழா, நம் பள்ளி வளர்ச்சிக்குத் தேவையான விழா, நம் மாணவர்கள் பங்கேற்கும் மிகப் பெரிய விழா. நமது பள்ளி சார்பில் அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகக் கூட்டத்தில் பங்கேற்று, விழா மிகப் பெரிய வெற்றியடைய உழைப்போம்.

பள்ளி வளர்ச்சிக்கு, பெற்றோர்களின் பின்னூட்டம் மற்றும் ஆதரவு மிகவும் அவசியம். எனவே, பாடப் புத்தகம், வீட்டுப் பாடம் மற்றும் பள்ளி நிகழ்வுகள் பற்றிய உங்கள் ஆலோசனைகளைத் தெரியப்படுத்தவும். பெற்றோர்-ஆசிரியர் கூட்டம் மற்றும் பள்ளி பெற்றோர்கள் கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு, உங்கள் கருத்துகளை தெரிவிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.



# தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுக்கு சமர்ப்பணம்

**ஆனந்த் ராமு**

மெல்லிய இதயம் கொண்ட,
என் வலிமையான வல்லினங்களே!
உண்மையை உரக்க போதிக்கும்,
வள்ளுவனின் பொருட்பால்களே!
மாணவர்களின் முயற்சிக்கு நெடிலாகவும்,
தவறுக்கு குறிலாகவும் இருக்கும் வெண்பாக்களே!
தமிழுக்கு என்றும் ஊன்றுகோலாய் நிற்கும்,
தன்னலமில்லா விழுதுகளே!
ஆம்! தமிழ்த் தாய் வரம் பெற்றாள்!
உங்களை வரமாக பெற்றாள்!
உங்கள் தமிழ்ப் பள்ளி தொண்டு வாழ்க!
மென்மேலும் வளர்க!

# தமிழ் மாதங்களின் மகிமைகள்

சிவசங்கரி சுரேஷ்குமார்

***சித்திரை*** *வெயிலை இளநீர் தணிக்க*
*சித்திரை விழாக்கள் கோலாகலமாக்கும்!*

***வைகாசி****யில் வைபோகம் கன்னியரும்*
*காளையரும் மணமாலைகள் சூடிட*
*மங்களமாகிடும்!*

***ஆனி****யில் உச்சி வெயில் தணியும்*
*ஊரெல்லாம் தென்றல் வீசும்!*

***ஆடி****யில் ஆறுகளில் புதுப்புனல்*
*பொங்கிடும் ஆடிப்பட்டம் தேடி*
*விதைக்கும்!*

*ஆவணி வந்ததும் நல்வரவும் வந்திடும்*
*தடையில்லா சுபகாரியங்கள்*
*நிகழ்ந்திடும்!*

***புரட்டாசி*** *விரதம் மாந்தரின் மனதை*
*பக்குவம் அடையச் செய்திடும்!*

***ஐப்பசி*** *மழை அடை மழை*
*ஊரெல்லாம் தீவு போல்*
*காட்சியளிக்கும்!*

***கார்த்திகை****யில் இல்லம்தோரும்*
*அகல்விளக்கு ஒளிவீசிட பல*
*நன்மைகள் புகுந்திடும்!*

***மார்கழி*** *குளிரில் வாசல்களில்*
*கோலங்களும் வயல்களில்*
*வசந்தங்களும் பூத்திருக்கும்!*

***தை*** *பிறந்தால் வழி பிறக்கும் தமிழர்*
*வாழ்வில் வளம் கொழிக்கும்!*

***மாசி****யில் மங்களம் சூடிடும் புது*
*வரவுகள் பொங்கிடும்!*

***பங்குனி****யில் ஊரெங்கும் திருவிழா*
*தெருவெங்கும் தேரோட்டம்!*















## உயிர் எழுத்துக்களின் உன்னதம்

தடுக்கி விழும் போது அ..... ஆ.....
சிரிக்கும் போது இ..... ஈ.....
சூடு பட்ட போது உ..... ஊ.....
அதட்டும் போது எ..... ஏ.....
ஐயத்தின் போது ஐ.....
ஆச்சரியத்தின் போது ஒ..... ஓ.....
வக்கணையின் போது ஔ.....

என்று சொல்லும் உயிர் எழுத்துக்கள்
நம் உயிரோடு உறவாடும்
உன்னதம் கண்டு உறைந்து விட்டீர்களா!!!!!

# உலக தாய்மொழி நாள்

**ரேவதி திருநா**

ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 21 ஆம் தேதி, உலக தாய்மொழி நாளாக பின்பற்றப்பட்டு வருகின்றது. இதன் நோக்கமே, ஒவ்வொரு நாட்டினரும் தங்கள் தாய்மொழியின் சிறப்பினையும், பன்முகத்திறனையும் நன்கு அறிந்துகொள்ள வேண்டும்; அதை எவ்விதம் பாதுகாக்க வேண்டும் மற்றும் வளர்க்க வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியை அவர்களிடம் ஏற்படுத்துவதுதான்.

மொழி என்பது, இலக்கியம் மட்டுமல்ல. அது கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம், மற்றும் மரபுகள் ஆகியவற்றை பாதுகாக்க மற்றும் வளர்க்க உதவும் சக்தி வாய்ந்த கருவியாகும். நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் சிறப்பினை, பல விதமாகக் கூறலாம்.

திராவிட மொழி என்ற பெருமை கொண்டது.

செம்மொழி - தொன்மையான மொழி என போற்றப்படுவது.

சொற்சுவை, பொருட்சுவை மிகுந்த இனிமையான மொழியாக விளங்குவது.

**பாதுகாக்கும் முறை:**

தமிழ்மொழியை தளராமல் தாங்கி நிற்க, அதை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல உதவுவது இலக்கியம், ஊடகம், கல்வி, மற்றும் தொழில்நுட்பம் ஆகிய நான்கு பெரும் தூண்களாகும். எளிமையாக சொல்வதென்றால், தமிழர்களின் பாரம்பரிய விழாக்களின் சிறப்பினை, அடுத்த தலைமுறையாம் நம் குழந்தைகளுக்கு புரிய வைத்து, அவர்களுடன் சேர்ந்து கொண்டாடி வருவதன் மூலம் பாதுகாத்து வரலாம்.

**வளர்க்கும் முறை:**

தமிழ்மொழி, இயல், இசை மற்றும் நாடகம் என்ற முத்தமிழ் வாயிலாக தொன்றுதொட்டு வளர்க்கப்பட்டு வருகின்றது. பரதம், தமிழிசை முதலிய பாரம்பரிய கலைகளை நம் குழந்தைகளுக்கு பயிற்றுவித்து, அவர்களை உற்சாகப்படுத்தி வருவதன் மூலம், தமிழ்மொழியை வளர்த்து வரலாம்.

இத்தகைய சிறப்புகள் மிக்க நம் தாய்மொழியாம் தமிழ் மொழியே, புலம் பெயர்ந்து வந்துள்ள நம் அனைவரையும், ஓர் குடும்பமாக இங்கு இணைத்துள்ளது. தமிழ்ச்சங்கம், தமிழ்ப்பள்ளி என நாம் சந்திக்கும் ஒவ்வொரு நாளுமே, நமக்கெல்லாம் உலக தாய்மொழி நாள்தான்!


வட அமெரிக்க தமிழ்ச்சங்கப் பேரவையும்
மிசௌரி தமிழ்ச் சங்கமும்
இணைந்து நடத்தும்

வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவையின் 27-ஆம் ஆண்டு விழா
2014ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4,5 தேதிகளில்
செயின்ட் லூயிஸ் பெருநகரப் பகுதியில் இருக்கும்
Chaifetz Arena-வில் கொண்டாடப்பட உள்ளது.

இவ்விழாவில் தமிழ் அறிஞர்கள், ஆர்வலர்கள், கலைஞர்கள் மற்றும் தொழில் அதிபர்கள் பலர் உலகெங்கும் இருந்து திரண்டு வந்து சிறப்பிக்க உள்ளார்கள்.
விழா நிகழ்ச்சிகள் பற்றிய விபரங்கள் விரைவில் அறிவிக்கப்படும்.
இவ்விழாவில் குடும்பத்துடன் கலந்துகொண்டு சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

www.fetna2014.com

# அச்சிடும் வரலாற்றில் தமிழ்

**ஆதித்யா முரளி**


ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இவற்றில் சில, மிக பழமையான மொழிகள் "செம்மொழிகள்" என்று அழைக்கப் படுகின்றன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை கிரேக்கம், சீனமொழி, யூதர் மொழி (Hebrew), சீரிய மொழி (Aramaic), லத்தீன், சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழி ஆகும். லத்தீன் மொழி, தமிழை விட பழமையானது என்றாலும், தமிழ் மொழி இன்றும் பேச்சு மற்றும் எழுத்து வழக்கில் வாழ்ந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சமஸ்கிருத மொழியை (கி.பி 100) விட தமிழ் மொழி (கி.மு 250) பழமையானது என்பது உங்களுக்குத் தெரியுமா? தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலான "தொல்காப்பியம்" கி.மு 200-களில் எழுதப்பட்டது.



**முதல் தமிழ் பைபிள்**

உலக வரலாற்றில் மதிப்பு மிக்க நவீன கண்டுபிடிப்புகளில் முக்கியமானது 'அச்சு பொறி இயந்திரம்' ஆகும். இது 1439-இல் கண்டு பிடிக்கப்பட்டது. இதன் கண்டு பிடிப்புக்கு முன்பாக, பெரும் செல்வந்தர்கள் மட்டுமே புத்தகங்களை வாங்க முடிந்தது. அதன் காரணம், புத்தகங்கள் கையால் நகல் எடுக்கப்பட்டன. அதற்காக நேரம் மற்றும் பொருள் அதிகமாக செலவானதோடு, பிழைகளும் அதிகமாக காணப்பட்டன. அச்சு பொறி கண்டுபிடிப்பால் புத்தகங்கள் பிழையின்றி இருந்ததோடு, அவைகள் விரைவாகவும், மலிவாகவும் எளியோருக்கும் கிடைத்தது.

ஐரோப்பிய மொழி அல்லாத வேறு மொழியில், முதன் முதலில் அச்சடிக்கப்பட்ட புத்தகம் எது தெரியுமா? தமிழ்மொழிதான்! போர்ச்சுகல் நாட்டில் உள்ள லிஸ்பன் நகரத்தில், 1554ஆம் ஆண்டு ரோம எழுத்துக்களை பயன்படுத்தி ஒலிபெயர்ப்பு (Transliteration) முறையின் மூலம் கிறிஸ்துவ தமிழ் இறைவணக்கப் புத்தகம் அச்சிடப் பட்டது. போர்ச்சுகல் நாட்டு பாதிரியார் Henrique Henriques முதல் ஐரோப்பிய தமிழ் கற்றறிவாளர் ஆவார். அவர், 1578ஆம் ஆண்டு கொல்லம் நகரத்தில் தமிழ் எழுத்துக்களை பயன்படுத்தி "**தம்பிரான் வணக்கம்**" என்னும் முதல் தமிழ்ப் புத்தகத்தை அச்சிட்டார்.




**தம்பிரான் வணக்கம்**

பிறகு சனவரி 1714-இல், நாகை அருகில் உள்ள தரங்கம்பாடியில் தமிழ் மொழியில் முதல் பைபிள் புத்தகம் Bartholomäus Ziegenbalg அவர்களால் அச்சிடப்பட்டது. இது 500 பக்கங்கள் கொண்ட நான்கு புத்தகங்களாக வெளியிடப்பட்டது.

ஐரோப்பாவிற்கு வெளியே, புத்தகங்கள் அச்சிடும் பணியில் தமிழ் மொழி முன்னிலையில் இருந்தது. இதற்குக் காரணம், அன்றைய ஐரோப்பிய தமிழ் அறிஞர்கள், தமிழ் மேல் உள்ள பற்றினால் கடினமாக உழைத்து, உயிரை பணயம் வைத்து தமிழ் கற்றனர். ஆனால், இப்பொழுது நாம் அத்தகைய கடினமின்றி மிசௌரி தமிழ்ப் பள்ளியில், தமிழ் கற்கிறோம்!

செம்மொழியான தமிழ் மொழியை, எனது தாய் மொழி என்று சொல்ல நான் மிகவும் பெருமைப்படுகிறேன்!

# சர்வதேச மகளிர் தினம்

## ப்ரியா ஸ்ரீதர்


உமா நாராயணன்

சர்வதேச மகளிர் தினம் – மார்ச் 8 ஆரம்பிக்கப்பட்டு, 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இந்நிலையில், மகளிர் கடந்து வந்த பாதையை சிறிது நினைவு கூறுவோம். பாரதத்தில் வேத காலங்களில், பெண்கள் அரசியல் ஆலோசகராகவும், சமூகத்தின் முக்கிய பொறுப்பு வகிப்பவராகவும் இருந்தனர். ஔவையாரின் அறிவுரை கேட்டு, ஆட்சி நடத்திய மன்னர்கள் பலர் உள்ளனர். பின், அன்னிய படையெடுப்பால், மாதர் நிலை சிறிது சிறிதாக மாறியது. சதி, குழந்தைத் திருமணம், தேவதாசி முறை, பர்தா போன்றவற்றால் பெண்ணின் நிலை பின்னுக்குத் தள்ளப்பட்டது. சிந்தனையை வளர்ப்பது கல்வி என்ற உண்மையை அறிந்த சமூகம் பெண்கல்வியைத் தடை செய்தது.

இவ்வளவு கொடுமைகளுக்கு நடுவிலும், தேவைப்படும் தருணங்களில் எல்லாம், இந்த சமூகத்திற்குப் பெண் உதவிக்கரம் நீட்டத் தவறவில்லை. தன் நாட்டின் நிலை முழுவதுமாக சீரழிந்த நிலையில், தானே ஆட்சிப் பொறுப்பை ஏற்று டெல்லியை ஆண்ட முதல் பெண் ரசியா பேகம், கிளியோப்பட்ராவுக்கு இணையாக அறிவிலும், அழகிலும் சிறந்து விளங்கிய நூர்ஜஹான் என்று எத்தனையோ பெண்கள். எனினும், தன் திறமையை வெளிப்படுத்தும் பாக்கியம், சராசரிப் பெண்ணிற்குக் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

இந்நிலையில், ஆண்களால் இழைக்கப்பட்ட சமூக இகழ்வுகளை எதிர்த்து ஒரு சில ஆண்களே போரிட்டதன் விளைவாக சதி, குழந்தைத் திருமணம், தேவதாசி முறை போன்றவை சிறிது சிறிதாகக் குறைந்து, பெண்கல்வி சமூக உரிமை ஆக்கப்பட்டது. இன்று, பெண்கள் இல்லாத துறையே இல்லை எனலாம். இருப்பினும், பெண் சமூகம் சமநிலைப்படுத்தப்பட்டதா என்பதற்கான விடை தெளிவு பெறவில்லை.

கிளியோப்பட்ராவின் அழகை மட்டுமே பேசும் சமூகம், அவளது அறிவுத்திறனையும், அரசியல் நுணுக்கங்களையும் நினைவு கூறுவது இல்லை. பிரதமரே காலில் விழுந்து வணங்கிய சமூக சேவகி, சக்தி புரஸ்கார் விருது வாங்கிய மதுரை சின்னப்பிள்ளையை எவ்வளவு பேருக்குத் தெரியும்? இன விடுதலைக்காக போரிட்ட ரோஸா பார்க்கரை, புத்தகங்களில் மட்டுமே நினைவு கூறுகிறோம். பெண் பாதுகாப்பு குறைந்த நாடுகளில், 4-வது இடத்தில் இந்தியா இருப்பதாக ஆராய்ச்சி கூறுகிறது.

பெண்கல்வி சமநிலைப்படுத்தப்பட்ட நிலையிலும், இந்த சமூக ஏற்ற தாழ்வுகளுக்குக் காரணம், ஆண் சமூகம் மட்டுமே என்று ஒற்றைவரியில் கூற இயலாது. காரணங்கள் பலவாக இருந்தாலும், பெண்களுக்குள் குறைந்துள்ள ஒற்றுமை, சகிப்புத்தன்மையின்மை போன்ற பலவீனங்களை இந்த சமூகம், தன் பலமாகப் பயன்படுத்துகிறது என்ற மறுக்க முடியாத உண்மையை உணர்ந்து, அதைக் களைய முனைவோமாக. அனைவருக்கும் மகளிர் தின வாழ்த்துக்கள்!

# பெண் அவள்

புவனா நந்தகுமார்



நான்...
கருவறை கிழித்து உலகத்தை உருவாக்குபவள்
நான்...
கண்களால் உணர்வுகளை உண்டாக்குபவள்
நான்...
அணு அணுவாய் எங்கும் நிறைந்தவள்
நான்...
அன்று முதல் இன்று வரை எதற்கும் உயிரானவள்
நான்...
காற்றுக்கும் வழி காட்டுபவள்
நான்...
கண்ணாடி இதயம் கொண்டவள்
நான்...
ஆயிரம் கரங்கள் கொண்டவள்
நான்...
ஆணுக்கு அகிலத்தை காட்டுபவள்
நான்...
என்றும் நானாய் வாழாதவள்
நான்...
நான் எனும் அகந்தையை அழித்தவள்
நான்...
தாயானவள்!

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | ஆ | | |
| இ | அ | ஈ | |
| ஆ | ஈ | இ | |

## தமிழ் சுடோகு

**Sudoku in Tamil**

நவின் நாராயணன்

| | | | |
|---|---|---|---|
| இ | | | அ |
| | அ | இ | |
| | | | இ |
| அ | | | ஆ |

# நீயே எனக்கு குருவானாய்...

**மீனா கணபதி**

*மழலை முதல் பெரிய பிள்ளைகள் வரையிலான நம் மாணவர்களுக்கு தமிழ் சொல்லிக் கொடுப்பது மிக இனிமையான அனுபவம். ஆரம்பம் முதல் தமிழ் படித்து வளர்ந்த நமக்கு, நம் அடுத்த தலை முறைக்கும் தமிழை எடுத்துச் செல்ல வாய்ப்பு கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சியே!*

மாந்தர்க்கு மண்ணில் சொர்க்கம் எதுவென்றால், அது மழலைப் பிள்ளைகளுடன் பேசிக் களிப்பதே என்போம். பள்ளியின் முதல் நாளில், மருண்ட விழிகளுடன், அம்மாவின் பின்னால் ஒடுங்கி நின்ற பிள்ளை, இன்று நாங்கள் பேச ஆரம்பித்தவுடனே அருவியாய் தமிழ் வார்த்தைகளைக் கொட்டுகிறது. மழலைகள் நம்மிடம் கதை சொல்லும் போது, அவர்கள் கைகள் பிடிக்கும் அபிநயமும், நொடிக்கு நூறு பாவம் காட்டும் கண்களும், தலையை சிலுப்பும் போது தெரியும் சிங்காரமும், நம்மை மற்றொரு ரம்மியமான உலகத்திற்கு இட்டுச் செல்கிறது. இட்லியை தேசிய உணவாக்கி, நம் பாரம்பரிய உணவை மதிப்பவர்கள் நம் மழலைகள். மதிய உணவுக்குப் பிறகு, சற்றே அரைத்தூக்க நேரத்திலும், அசாத்தியமான உற்சாகத்துடன் தமிழ் படிக்கிறார்கள், இந்த இளஞ்சிட்டுகள்.

அடுத்தடுத்த நிலைகளில் உள்ள மாணவர்கள், நம்மை கோவிலிலோ, கடைத்தெருவிலோ காண நேரும் போது, 'வணக்கம்' சொல்வதும், தமிழில் பேசுவதுமாய் ஆச்சரியப்படுத்துகிறார்கள். தும்மல் வந்தால், 'Bless You' என்று சொல்வதைத் தவிர்த்து, தமிழில், **வாழ்க வளமுடன்** என்கிறாள், ஒரு மாணவி.

பள்ளி நேரத்துக்கு முன்னதாக வரும் மாணவர்கள் சிலர், பெற்றோருடன் சேர்ந்து, மேசைகளையும், நாற்காலிகளையும் எடுத்துப் போட்டு வகுப்பறையை உருவாக்குகிறார்கள். வகுப்பில், தொடர்ச்சியாக 2 மணி நேரமும் தமிழ் மொழி சார்ந்தவற்றை மட்டுமே கற்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது நமக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது.

பிள்ளைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கத்தான் ஆசிரியர்களாய் வந்தோம். ஆனால் அவர்கள் நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறார்கள், கிள்ளைப் பேச்சால் உள்ளம் கொள்ளை கொள்கிறார்கள், நம் தமிழ்ச் சமுதாயம் என்ற உணர்வைத் தருகிறார்கள், தமிழை அவர்களுக்கு கற்றுத்தரும் போது நம் பிள்ளைப்பருவத்தின் மலரும் நினைவுகளை நமக்கு மீட்டுத்தருகிறார்கள், பல வடிவங்களில் கேள்வி-களைக் கேட்டு, நம்மை சிந்திக்க வைக்கிறார்கள், அந்த வகையில் எம் மாணவர்களே பல நேரங்களில் எமக்கு குருவாகிறார்கள்.

கள்ளமில்லா பிஞ்சு நெஞ்சங்களுக்கு தமிழ்ப் பணியாற்றவே இறைவன் நம்மைப் படைத்திட்டான் என்பதுதான் நிறைவான செய்தி!



**Tamil School of Missouri Newsletter**
**Arumbu—Edition 2, April 2014**

Editor: Mrs. Sunitha Jothilingam

Sub-Editor: Mrs. Revate Thruna

Newsletter Design: Mr. Sivakumar Selvaraju

### Executive Committee

President: Mr. Porchezhian Ramaswamy

School Director: Mr. Senthil Radhakrishnan

Development Director: Mr. Elango Thirupathy

### Administrative Office

Mrs. Meena Ganapathy

Mrs. Priya Sridhar

Mrs. Priya Gnanasivam

Principal: Mr. Alagendran Sundarrajan

Secretary: Mr. Dhanabal Radhakrishnan

Treasurer: Dr. Jothilingam Sivapackiam

Course Director:
Mrs. Bhuvaneshwari Nandakumar

**மிசௌரி தமிழ் பள்ளி செய்திமடல்**
**அரும்பு-இதழ்-2, சித்திரை, திருவள்ளுவராண்டு 2045**

ஆசிரியர்: திருமதி. சுனிதா ஜோதிலிங்கம்

இணையாசிரியர்: திருமதி. ரேவதி திருநா

செய்திமடல் வடிவமைப்பு: திரு. சிவகுமார் செல்வராஜு

### செயற்குழு நிர்வாகிகள்

தலைவர்: திரு. பொற்செழியன் ராமசாமி

பள்ளி இயக்குனர்: திரு. செந்தில் இராதாகிருஷ்ணன்

வளர்ச்சிப் பணி இயக்குனர்: திரு. இளங்கோ திருப்பதி

### நிர்வாக அலுவலகம்

திருமதி. மீனா கணபதி

திருமதி. பிரியா ஸ்ரீதர்

திருமதி. பிரியா ஞானசிவம்

முதல்வர்: திரு. அழகேந்திரன் சுந்தர்ராஜன்

செயலாளர்: திரு. தனபால் இராதாகிருஷ்ணன்

பொருளாளர்: முனைவர். ஜோதிலிங்கம் சிவபாக்கியம்

பாடத் திட்ட இயக்குனர்:
திருமதி. புவனேஸ்வரி நந்தகுமார்



நமது பள்ளியின் புதிய இணையத்தளம் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் தேவையான பல முக்கிய தகவல்களுடன் தொடங்கப்பட்டுள்ளது. இணையத்தளத்தில் கொடுக்கப்பட்டுள்ள மாணவர்கள் கையேடு, பெற்றோர்கள் கையேடு போன்ற தகவல்களை அனைவரும் ஒரு முறை படித்து அறிந்து கொள்ளவும்.

**Website: school.missouritamilsangam.org**

பள்ளித் தகவல்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள முகநூல் பக்கமும் தொடங்கப்பட்டுள்ளது.

**Follow us at Facebook: www.facebook.com/TamilSchoolofMissouri**